கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No.208/2025 நாள்: 05.08.2026

<u>வா.சா.2 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா – 2 செல்வம் முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>1ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை வாதி தான் தயாரித்து கொடுத்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 2 வது பாராவில் 2017 ஆம் வருடத்தில் 1ஆம் பிரதிவாதிக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் ஈடு கடன் பத்திரம் எழுதி கொடுத்த விவரம் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஈடு கடன் பத்திரம் எந்ததேதியில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவரிடம் நான் 2018 ஆம் வருடத்திலிருந்து watch man ஆக வேலை பார்க்கிறேன். 2019 ஆம் வருடத்திய ஈடு மேடோவர் பத்திரத்தில் 3 வதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

1ஆம் பிரதிவாதியின் பெயர் அவருடைய தந்தை, தங்கை ரம்யா ஆகியோர்களை தெரியும். நான் ரியல் எஸ்டேட் புரோக்கராக வாதியிடம் வேலை பார்த்தேனா என்றால் வாதியிடம் watch man வேலை தான் பார்த்தேன் ஆனால் அதற்கு முன்பு நான் ரியல் எஸ்டேட் புரோக்கராக வேலை

பார்த்தேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும். தாவா சொத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை குத்தாலிங்க நாடார் தான் அனுபவத்தில் இருந்தார் என்றால் இல்லை. தாவா சொத்து வீரபத்திரன், ரம்யா ஆகியோரின் அனுபவத்தில் உள்ளது. தற்போது அவர்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் தான் வாதிக்கு ஈடு மேடோவர் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தேன் என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக யாரிடம் பேசினேன் என்றால் வீரபத்திரன், ரம்யா, முருகன் ஆகியோரிடம் பேசினேன். ரம்யா, முருகன் ஆகியோர் சொத்திலிருந்து தேங்காய் பறிப்பதற்கு மட்டும் ஈடு மேடோவர் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் இல்லை. நான் ஈடு மேடோவர் செய்த பிறகு சொத்திற்குள் சென்று தேங்காய் பறிப்பதற்காக சென்றேனா என்றால் இல்லை.

எத்தனை மணிக்கு சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்றால் 10.30 மணிக்கு சென்றேன். 2 மணி நேரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தேன். எவ்வளவு தொகையை என் முன்னால் கொடுத்தார்கள் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து 9 லட்சமும் மற்றும் 9 லட்சமும் ஆக மொத்தம் 18 லட்சத்துடன் 1 லட்சம் வட்டி சேர்த்து 19 லட்சத்திற்கு காசோலை கொடுத்தார்கள். ஈடு மேடோவர் பத்திரம் என்பதால் 18 லட்சம் மட்டும் கொடுப்பார்கள் என்றும் வட்டி கொடுக்கமாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் watch man ஆக வேலை பார்ப்பதால் அவருக் குஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஈடு மேடோவர் பத்திரத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்

குதெரியாது என்றால் சரிதான். என்னுடைய சாட்சியம் நிராகரிக்க தக்கது என்றால் சரியல்ல.

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.08.05 17:19:04 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.